**கம்பளை நகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கம்பளை நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 181 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பளை நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

  - உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

  - பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

  - நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

  - தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாகவும்

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் -சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குகின்றன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தொடர்ச்சியாகக் காணப்பட்டு வரும் மீதிகளை உறுதிப்படுத்த முடியாத ரூபா 2,282,360 ஆன ஊழியர் கடன் மீதியொன்று மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக் களில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | தவறுதலாகக் கணக்கீடு செய்யப்படவில்லை | நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் ரூபா 1,350,000 ஆன நிர்மாண கடன்கொடுத்தோர் மீதிகள் 02 நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாகக் கணக்கீடு செய்யப்படவில்லை | நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டின் 06 நிர்மாண கடன்பட்டோருக்குரிய மொத்தம் ரூபா 1,741,032 நிதிக்கூற்றுக்களில் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | தவறுதலாக கூடுதலாகக் கணக்கீடு செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டின் போது சீராக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) 05 சந்தர்ப்பங்களுக்குரிய நிர்மாண பிடிகாசு ரூபா 354,307 மற்றும் 06 சந்தர்ப்பங்களுக்குரிய நானாவித வைப்புக்கள் ரூபா 9,837 என மொத்தம் ரூபா 364,144 | தவறுதலாகக் கணக்கீடு செய்யப்படவில்லை | நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | மின்சாரம் எழுதுகருவி மற்றும் வாகன உதிரிப் பாகங்கள் அலகுகள் 19 இற்குரிய இருப்புப் பெறுமதி ரூபா 156,599 கூடுதலாகவும் நிர்மாணம் மின்சாரம் எழுதுகருவி மற்றும் 27 வாகன உதிரிப் பாகங்கள் அலகுகளுக்குரிய ரூபா 318,129 ஆன இருப்பு பெறுமதிகள் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | இருப்புப் புத்தகங்கள் சரியானதெனவும் இருப்புப் புத்தகங்களை சீராக்குவதாகவும் கணக்கீடு செய்தவற்றை எதிர்காலத்தில் சீராக்குவதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | சரியான இருப்பு பெறுமதி உள்ளடக்கப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 02 சந்தர்ப்பங்களுக்குரிய நிலுவை கடை வாடகை மீதி ரூபா 10,112,700 கூடுதலாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருந்தது. | தவறுதலாகக் கணக்கீடு செய்யப்படவில்லை | நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காணப்படும் 03 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 268,678,501 ஆன மீதிகள் மற்றும் அவற்றுக்குரிய பயன்பாட்டு பதிவேடுகளில் காண்பிக்கப்படும் ரூபா 196,811,678 ஆன மீதிகளுக்கு இடையே ரூபா 71,866,823 ஆன வேறுபாடுகள் காணப்பட்டது. | வேறுபாடுகளுக்கு காரணம் கண்டுபிடிக்கப்பட்டு விரைவில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறவிக்கப்பட்டிருந்தது. | வேறுபாடுகள் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூலமான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் ரூபா 15,782,429 ஆன 03 சொத்து விடயங்களுக்குரிய குத்தகை வாடகை பதிவேடு சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை கணக்காய்வின் போது வெற்றிகரமாக மேன்மை ஆய்வு செய்ய முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாத வண்ணம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7. இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போதுசட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | பாராளுமன்ற சட்டங்கள் | | | |
| (i) | நகர சபை கட்டளைச் சட்டத்தின் 157(6) (எ) பிரிவு | நகரசபை அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த சுவரொட்டிகள் மற்றும் விளம்பர அறிவிப்புப் பதாதைகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 925,500 கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பணத்தை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நகர சபை கட்டளைச் சட்டத்தின் 36 (உ) (ii) பிரிவு | (I) அமைச்சரின் முன் அங்கீகாரமின்றி சபைக்குச் சொந்தமான காணி யொன்று சட்டத்தரணி அலுவலகமொன்றை பேணி பராமரித்துச் செல்வதற்காக நீண்ட கால குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | (II) அமைச்சரின் முன அங்கீகாரம் இன்றி கம்பளை இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் நிறுத்துமிடத்தின் 42 கடைகளுடன் கூடிய கடைத்தொகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டு அதனைப் பராமரித்துச் செல்ல தனியார் தரப்பினருக்கு 2000 திசெம்பர் மாதம் 29 ஆம் திகதி முதல் 30 ஆண்டு காலத்துக்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 3,661,301 ஆன வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | முதிப்பீட்டுத் தொகை கூடுதலாகக் குறிப்பிடப்பட்டு குத்தகைத் தொகையை கொடுப்பனவு செய்வதற்கு குத்தகையாளர்கள் நிராகரித்து இருந்ததால் புதிய | மதிப்பீட்டினைக் பெற்றுக் கொள்வதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| | நிதிப்பிரமாணம் 189 மற்றும் 486 | 2004 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை 28 தரப்பினரிடமிரந்து கிடைத்த ரூபா 563,753 ஆன காசோலைகள் மதிப்பிழருந்த போதும் அது தொடர்பாக 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரை உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் தீர்மானத்தின் பேரில் குழுவொன்று நியமிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2016 மார்ச் 03 ஆந் திகதிய 2016/3 ஆம் இலக்க உள்ளூராட்சிமன்ற ஆணையாளரின் சுற்றறிக்கையின் V ஆம் பந்தி | சபை தீர்மானமொன்று எடுக்கப்பட்டால் பொது வியாபாரச் சந்தை கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்குரிய ஒரே தடவையில் செலுத்தப்படும் தொகையில் 50 சதவீதம் கொடுப்பனவைச் செய்து எஞ்சியவற்றை 06 மாதங்களுக்குள் தவணையாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமான போதும் சுற்றறிக்கை அறிவுறுத்தலைப் பின்பற்றாமல் பொது வியாபாரச் சந்தையில் ஒரு தடவையில் பணத்தை அறவிடுவது தொடர்பாக விஷேட குழுவின் போது 25 சதவீதத்தைச் செலுத்தி எஞ்சிய தொகையை 48 சம தவணைகளாகப் பெற்றுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 63,336,199 ஆன நிலுவைத் தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | எஞ்சிய தொகையை தவணை அடிப்படையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 73,847,288 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 60,198,035 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதவரி மற்றும் வரி நிலுவை ரூபா 59,682,577 ஆக இருந்ததுடன் அந் நிலுவையில் 14 அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 17,321,170 ஆன மீதியொன்று காணப்பட்டது. | அரச நிறுவனங்களால் நிலுவை கொடுப்பனவு செய்யப்படாமை தொடர்பாக உள்ளுராட்சி மன்ற ஆணையாளருக்கு தெரியப்படுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கம்பளை பொது வியாபாரச் சந்தைத் தொகுதியின் 152 ஆம் இலக்க கடையில் இருந்து 2016 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய ரூபா 6,000,750 ஆன ஒரே தடவையில் பெற வேண்டிய பணம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஒரே தடவையில் அறவிடப்பட வேண்டியதற்காக குறித்த கடை உரிமையாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சபைக்குச் சொந்தமான காணிகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 155 குத்தகையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3,874,472 ஆன குத்தகை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | 155 குத்தகையாளர் களிடமிருந்து குத்தகையாக 2022 ஜூலை 31 இல் உள்ளவாறு ரூபா 714,458 அறவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் குத்தகை வாடகை அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் போதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 மார்ச் 17 ஆம் திகதி 2016/3 ஆம் இலக்க மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிகையின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான கடைகளில் இருந்து கடைகளுக்கான வாடகை 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்ய வேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான கடைகள் 2008 ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | புதிய மதிப்பீடொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 விளைவற்ற மற்றும் குறை பயன்பாடுடைய ஆதனங்கள் பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11,614,423 ஆன 08 வாகனங்களும் 03 அரச வீடுகளும் விளைவற்றும் குறைபயன்பாட்டிலும் காணப்பட்டன. | கம்பெக்டர் இயந்திரத்திற்கு உதிரிப் பாகங்கள் இல்லாமையால் திருத்த வேலைகள் தாமதமாகி இருந்தது. மகேந்திரா கெப் வண்டி திருத்துவதற்கு மதிப்பீடு கோரப்பட்டுள்ளது. உத்தியோகத்தர் விடுதி களை திருத்தி அமைப்பதற்கும் 02 வீடுகளை உடைத்து அகற்றுவதற்கும் புதிய வீடுகள் அமைப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்களை செயற் திறனான முறையில் பயன்படுத்தல் வேண்டும். |